செ.வெ.எண்:26 நாள்:16.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

2017 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி வரைவுப்பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம் மற்றும் இடமாற்றம் செய்ய விண்ணப்பங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் 30-ஆம் வரை பெறப்பட்டன.

அரியலூர் மாவட்டத்தில் 12,969 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 12,354 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன. அவர்கள் கடந்த ஜனவரி 5-ஆம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டை பதிவு ஆகியவற்றின் காரணமாக 5,876 பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின்போது அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகள் அந்தந்த பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டது.

தற்போது பதிவு வாக்காளர்களுக்கு **அரசு இ-சேவை மையங்கள்** மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண், குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை தங்கள் தொகுதிக்குட்பட்ட **அரசு இ-சேவை மையத்தில்** காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

இதற்காக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கைப்பேசி எண்ணை அளிக்காத புதிய வாக்காளர்கள், தேர்தல் துறையின் கட்டணமில்லா உதவி எண்.1950-ஐ தொடர்பு கொண்டு கைப்பேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும் அவர்களுக்கும் அடையாள எண் அனுப்பப்படும். அவர்களும் தங்களுடைய ஏதேனும் ஒரு புகைப்பட அடையாளச் சான்றை காண்பித்து **அரசு இ-சேவை மையங்களில்** வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**